காஞ்சிபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
முன்னிலை – ரெ. திருவளர்செல்வி, எம்.ஏ., பி.எட்., எம்.பில்.,
ப. மு. எண். 4425 / அ1 / 2021, நாள். 17.12.2021.

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு தொகுதி IV தேர்வு 2018-2019 மற்றும் 2019-2020-ன்படி நியமனம் செய்யப்பட்டு சோமங்கலம், அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி - இளநிலை உதவியாளர் **திருமதி. மா.அருணா** என்பாருக்கு இளநிலைஉதவியாளர் பதவியில் 21.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண். 101 பள்ளிக் கல்வி (வரவு செலவு), நாள் 18.05.2018
2. சென்னை-03, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுச் செயலாளரின் கடிதம் எண்.2563/PSD-I2/2020 நாள்.21.07.2020.
3. காஞ்சிபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண். 2682/அ1/2020, நாள். 17.09.2020.
4. சோமங்கலம், அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியரின் கடிதம் ந.க.எண். 84/2021 நாள்.08.12.2021.

-------

சோமங்கலம், அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் **திருமதி. மா.அருணா** என்பாருக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி IV தேர்வு 2018-2019 மற்றும் 2019-2020 மூலம் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பார்வை-3 காணும் செயல்முறைகளின்படி சோமங்கலம், அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு 21.09.2020 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

மேற்காண் பணியாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு மூலம் தேர்வு செய்யப்பட்டதாலும், கல்விச் சான்றுகளின் உண்மைத் தன்மை அறியப்பட்டுள்ளதாலும், பார்வை 4-ல் காணும் தலைமையாசிரியரின் கடிதத்தின்படி மேற்காண் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரி கருத்துரு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சார்ந்த பணியாளருக்கு தற்போது அரசாணை எண். 101 பள்ளிக் கல்வி (வரவு செலவு), நாள் 18.05.2018-ன்படி முதன்மைக் கல்வி அலுவலருக்கு நியமன அலுவலராக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலும், கீழ்க்காணும் பணியாளருக்கு மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டிற்குள் தகுதிகாண் பருவத்தை முடிக்கவேண்டும் எனத் தெரிவித்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 31(4)ல் தெரிவித்துள்ளவாறு ஐந்தாண்டுகளுக்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்காணும் அவரது பெயருக்கு எதிரே கலம் (5)-ல் உள்ளவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாகிறது.

| வ.எண். | தேர்வாணைய பட்டியல் வரிசை எண். | பெயர் / பதவி / பணிபுரியும் பள்ளி | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | 288 | திருமதி. மா.அருணா,<br>இளநிலை உதவியாளர்<br>அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி,<br>சோமங்கலம். | 21.09.2020<br>முற்பகல் | 21.09.2020<br>முற்பகல் |

மேற்காண் பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்து மேற்காண் பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

**இணைப்பு** – பணிப்பதிவேடு (தொகுதி – 1)

17/12/21

முதன்மைக் கல்வி அலுவலர்,
காஞ்சிபுரம்.

15/12/21

**பெறுநர்**

சம்பந்தப்பட்ட பணியாளர் (தலைமையாசிரியர் வழியாக)

**நகல்**